SRI LANKA

இலங்கை
கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2025

முன்னோடி வினாத்தாள்

மட்டம் 01

1901 - நிதிக் கணக்கீடு (FAC)

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

இலங்கை

கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

1901 - நிதிக் கணக்கீடு [FAC]

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்)

அனுமதிக்கப்பட்ட காலம்:

விடையெழுத : 03 மணித்தியாலம்

வினாத்தாள் கட்டமைப்பு:

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது: பகுதி **A**, பகுதி **B** மற்றும் பகுதி **C**.
- பகுதி **A**, பகுதி **B** மற்றும் பகுதி **C** ஆகியவற்றிலுள்ள அனைத்து வினாக்களும் கட்டாயமானவை.

புள்ளிகள்:

- ஒவ்வொரு பகுதிக்குமான புள்ளிகளின் ஒதுக்கீடு:

பகுதி	புள்ளிகள்
பகுதி **A**	40
பகுதி **B**	40
பகுதி **C**	20
மொத்தம்	**100**

- ஒவ்வொரு வினாவுக்குமான புள்ளிகள் வினாவுடன் காட்டப்பட்டுள்ளன.
- இவ்வினாத்தாளுக்கான சித்திப் புள்ளி 50 ஆகும்.

விடைகள்:

- அனைத்து விடைகளும் உங்களுக்குத் தரப்படுகின்ற விடைப்புத்தகத்தில் எழுதப்பட வேண்டும். வினாத்தாளிலேயே எழுதப்படும் விடைகள் புள்ளியிடுவதற்காகக் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- ஒவ்வொரு வினாவுக்குமான உங்கள் விடையை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.
- அனைத்துச் செய்முறைகளும் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- தாளின் ஓரங்களில் எழுத வேண்டாம்.

விடைத்தாள் புத்தகம்:

- ஒவ்வொரு விடைத்தாள் புத்தகத்தினதும் முகப்பு அட்டையில் அறிவுறுத்தல்கள் காட்டப்பட்டுள்ளன.

கணிப்பான்கள்:

- பரீட்சார்த்திகள் குறியீட்டு அட்சரகணிதம் மற்றும் வகையீடுகளுக்கான வசதிகளற்ற எந்தவொரு கணிப்பானையும் பயன்படுத்தலாம். நிரற்படுத்தத்தக்க கணிப்பான்கள் அனுமதிக்கப்பட மாட்டாது.

இணைப்பு:

- செயல் வினைச்சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல் – ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் (OTQ's தவிர) கொண்டிருக்கும். மாணவர்கள் சரிபார்ப்புப் பட்டியலில் தரப்பட்டுள்ள வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)
இருபது (20) கட்டாய வினாக்கள்

பகுதி A

(ஒவ்வொன்றிற்கும் இரண்டு புள்ளிகள் - மொத்தம் 40 புள்ளிகள்)

வினா 01

இல. 1.1 இலிருந்து 1.10 வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக

1.1. ஒரு நிறுவனத்தின் நிதிக் கணக்கீட்டின் ஒரு பிரதான நோக்கத்தை பின்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்க:

(1) தீர்மானங்களை எடுப்பதற்காக முகாமையாளர்களுக்கு தகவல்களை வழங்குவது.

(2) அரசாங்கத்திற்கு தகவல்களை வழங்குவது.

(3) வணிகத்தின் நிதிச் செயலாற்றுகையைப் புரிந்து கொள்வது.

(4) வணிகப் பொருள்களின் விற்பனை விலையைத் தீர்மானிப்பது.

1.2. **கபில டிரேடர்ஸ்** கடன் அடிப்படையில் கொள்வனவு செய்த ரூ. 400,000/- பெறுமதியான பொருள்களை வழங்குநரான **DGL** இற்குத் திருப்பி அனுப்பியது. மேற்படி பரிவர்த்தனையைப் பதிவு செய்வதற்கு **கபில டிரேடர்ஸ்** இனால் பயன்படுத்தப்படும் சரியான மூல ஆவணம் :

(1) விற்பனை விலைப்பட்டியல்

(2) காசுப் பெறுவனவு

(3) செலவுக் குறிப்பு

(4) வரவுக் குறிப்பு.

1.3. **சரத் டிரேடர்ஸ்** கடனடிப்படையில் **வரையறுக்கப்பட்ட மெட்ரோபோலோ (தனியார்) கம்பனியிடம்** இருந்து அலுவலகப் பாவனைக்காக ரூ. 200,000/- இற்கு அலுவலக உபகரணத்தைக் கொள்வனவு செய்தது.

மேற்படி ஊடுசெயலைப் பதிவு செய்வதற்கான சரியான இரட்டைப் பதிவு :

(1) மெட்ரோபோலோ கணக்கு – வரவு மற்றும் காசுக் கணக்கு – செலவு.

(2) அலுவலக உபகரணக் கணக்கு – வரவு, மற்றும் காசுக் கணக்கு – செலவு.

(3) அலுவலக உபகரணக் கணக்கு – வரவு மற்றும் ஏனைய சென்மதிகள் கணக்கு – செலவு.

(4) அலுவலக உபகரணக் கணக்கு – வரவு மற்றும் மூலதனக் கணக்கு – செலவு.

1.4. **நவாஸ் டிரேடர்ஸ்** என்பது **நவாஸ்** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுடமை வியாபாரம் ஆகும். **நவாஸின்** தொலைபேசிக் கட்டணப் பட்டியல் வணிகத்தால் செலுத்தப்பட்டதுடன் இது வணிகத்தின் எடுப்பனவாகக் கருதப்பட்டது. மேற்படி கூற்றுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு :

(1) உரிம எண்ணக்கரு

(2) முன்னெச்சரிக்கை எண்ணக்கரு

(3) அட்டுறு எண்ணக்கரு

(4) பொருத்தப்பாட்டு எண்ணக்கரு.

1.5. பின்வரும் கணக்கீட்டுத் தொகுப்புகளில் இருந்து பொதுக் கணக்கீட்டுத் தொகுப்பைத் தெரிவு செய்க:

(1) சம்பளப்பட்டியல் முறைமை (2) இருப்பு முகாமைத்துவ முறைமை

(3) Tally முறைமை. (4) மேற்கூறிய யாவும்.

1.6. பின்வரும் தகவல்கள் ஒரு தனியுடமை வியாபாரமான **XYZ டிரேடர்ஸின்** ஏடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

	ரூ.
2024 ஏப்ரல் 01 இல் மூலதனம்	5,000,000
2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம்	1,800,000
2025 மார்ச் 31 இல் பரிப்புக்கள்	2,750,000
2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் எடுப்பனவுகள்	400,000

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2025 மார்ச் 31 இல் வணிகத்தின் மொத்தச் சொத்துக்கள்:

(1) ரூ. 9,150,000/-. (2) ரூ. 3,650,000/-.

(3) ரூ. 9,950,000/-. (4) ரூ. 8,750,000/-.

1.7. பின்வருவனவற்றில் வருமானக் கூற்றின் ஒரு கூறாக அமைவது எது?

(1) பரிப்புக்கள் (2) வருமானம்

(3) உரிமையாண்மை (4) சொத்துக்கள்

1.8. மரபு ரீதியாக, பேரேட்டுக் கணக்குகளை பெயரளவுக் கணக்குகள், உண்மையான கணக்குகள், மற்றும் தனிப்பட்ட கணக்குகள் என வகைப்படுத்தலாம். பேரேடுகளின் மரபு ரீதியான வகைப்படுத்தலின் கீழ், ''உரிமையாளரால் மேற்கொள்ளப்பட்ட எடுப்பனவுகள்'' இற்கான சரியான வகைப்படுத்தலானது :

(1) தனிப்பட்ட கணக்கு (2) பெயரளவுக் கணக்கு

(3) உண்மையான கணக்கு (4) மேற்கூறிய எதுவுமல்ல.

1.9. கிரயத்தில் அல்லது நிகர தேறத்தக்க பெறுமதியில் (NRV) எது குறைந்ததோ அதில் இருப்புகளை அளவிட அனுமதிக்கும் அடிக்கோடிட்ட கணக்கீட்டு எண்ணக்கருவை பின்வருவனவற்றில் இருந்து தெரிவு செய்க.

(1) அட்டுறு எண்ணக்கரு (2) பொருத்தப்பாட்டு எண்ணக்கரு

(3) கொள்கை மாறாமை எண்ணக்கரு (4) முன்னெச்சரிக்கை எண்ணக்கரு

1.10. "**யுனிமோ டிரேடர்ஸ்** 5% கழிவுக்கு உட்பட்டு, ஒரு வியாபாரக் கடன்கொடுத்தோருக்கு ரூ. 200,000/- விலைப்பட்டியலைச் செலுத்தியுள்ளது". இந்த ஊடுசெயலின் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான சரியான தாக்கத்தை பின்வருவனவற்றில் இருந்து தெரிவு செய்க :

	சொத்துக்கள் (ரூ.)	**=**	**உரிமையாண்மை / மூலதனம் (ரூ.)**	**+ பரிப்புக்கள் (ரூ.)**
(1)	- 200,000	=		- 200,000
(2)	- 180,000	=	+ 20,000	- 200,000
(3)	- 190,000	=	+ 10,000	- 200,000
(4)	+ 190,000	=	- 10,000	+ 200,000

கீழே **1.11** தொடக்கம் **1.15** வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைத்தாள் புத்தகத்தில் குறிப்பிடுக.

1.11 சார்பற்ற நிலை (Objectivity) என்பது கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டுப் பின்பற்றப்படுகின்ற நெறிமுறைக் கோவையின் ஒரு கோட்பாடு ஆகும்.

1.12 அட்டுறு எண்ணக்கருவின்படி, காசு பெறப்பட்டுள்ளதா, இல்லையா என்பதைப் பொருட்படுத்தாது குறித்த கணக்கீட்டுக் காலப்பகுதியில் வருமானம் ஏற்பிசைவு செய்யப்படுகிறது.

1.13 பரீட்சை மீதியைத் தயாரிப்பதன் மூலம் அனைத்துக் கணக்கீட்டு வழுக்களையும் கண்டறியக்கூடியதாக இருக்கும்.

1.14 தொடர்புடைமை என்பது நிதித் தகவல்களின் ஓர் அடிப்படையான தரம்சார் பண்பாகும்.

1.15 பொதுப் பேரேடு என்பது ஒரு முதன்மைப் பதிவேடு ஆகும்.

1.16 தொடக்கம் **1.20** வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைத்தாள் புத்தகத்தில் உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.

1.16 பின்வரும் இரண்டு (02) பரிவர்த்தனைகளுடன் தொடர்புடைய மூல ஆவணங்களைக் குறிப்பிடுக:

(a) அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பு ரூ. 200,000/-

(b) மறு விற்பனை நோக்கத்திற்காக கடனடிப்படையில் ரூ. 200,000/- பெறுமதியான பொருள்களின் கொள்வனவு.

1.17 கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு மென்பொருள் ஒன்றின் இரண்டு (02) பிரதிகூலங்களைப் பட்டியலிடுக.

1.18 **ஜிம்சரா டிரேடர்ஸின்** 2025 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ.100,000/- ஆகவிருந்த அதே வேளை வியாபாரக் கடன்பட்டோரின் பேரேட்டின்படியான மீதி, கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியில் இருந்து வேறுபட்டிருந்தது. கடன்பட்டோர் பேரேட்டிற்கும் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் இடையேயான வேறுபாட்டிற்கான பின்வரும் காரணங்களை கணக்கு நிறைவேற்றுநர் அவதானித்திருந்தார்.

- அறவிட முடியாக் கடன் பதிவழிப்பு ரூ. 10,000/- ஆனது கட்டுப்பாட்டுக் கணக்கில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.
- வியாபாரக் கடன்பட்டோரிடம் இருந்து கிடைத்த தொகையானது வியாபாரக் கடன்பட்டோரின் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூ. 8,000/- இனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.
- விற்பனை நாட்குறிப்பேடு ரூ. 5,000/- இனால் மிகைப்படுத்திக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2025 மார்ச் 31 இலான திருத்தப்பட்ட வியாபார வருமதிகளின் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியைக் கணிப்பிடுக.

1.19 நடைமுறைப் பரிப்புகளுக்கான இரண்டு (02) உதாரணங்களைக் குறிப்பிடுக.

1.20 பரீட்சை மீதியைத் தயாரிப்பதன் இரண்டு (02) நன்மைகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 40 புள்ளிகள்)

பகுதி A முடிவு

நான்கு (04) கட்டாய வினாக்கள்

பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா 02

ஹசாலி, ஹஷோ டிரேடர்ஸ் இனை 2025 ஏப்ரல் 01 இல் ஆரம்பித்தார். பின்வரும் பரிவர்த்தனைகள் 2025 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்றிருந்தன.

(1) **ஹசாலி** 2025 ஏப்ரல் 01 இல் ஆரம்ப மூலதனமாக, காசாக ரூ. 500,000/- ஐயும் ரூ. 1,500,000/- பெறுமதியான இயந்திரத்தையும் முதலீடு செய்துள்ளார்.

(2) 2025 ஏப்ரல் 03 இல் மறு – விற்பனைக்காக கடனடிப்படையில் **மோத்தா (பிரைவேட்) லிமிட்டெட்** இடமிருந்து ரூ. 800,000/- பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்துள்ளார்.

(3) ரூ. 300,000/- கிரயமான பொருள்கள் **ஆஷினி** என்பவருக்கு கடனடிப்படையில் ரூ. 500,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டன.

(4) ஏப்ரல் மாதத்திற்கான மின்சாரக் கட்டணப் பட்டியல் ரூ. 20,000/- ஆகும். இது **ஹசாலியால்** 2025 ஏப்ரல் 15 இல் செலுத்தப்பட்டது. இந்தத் தொகையை மேலதிக மூலதன முதலீடாகக் கருத **ஹசாலி** தீர்மானித்தார்.

(5) **ஆஷினி,** 10% காசுக் கழிவுக்கு உட்பட்டு 2025 ஏப்ரல் 26 இல் ரூ. 400,000/- ஐத் தீர்ப்பனவு செய்தார்.

(6) **ஹசாலி** தனது சொந்தப் பாவனைக்காக ரூ. 50,000/- பெறுமதியான பொருள்களை எடுத்துள்ளார்.

(7) இயந்திரம் மீதான 2025 ஏப்ரல் மாதத்திற்கான பொருத்தமான தேய்மானம் ரூ. 10,000/- ஆகவிருந்தது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

(a) பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான மேற்படி பரிவர்த்தனைகளின் தாக்கத்தைக் **குறிப்பிடுக** :

(இயந்திரம் + இருப்பு + வியாபார வருமதிகள் + காசு = உரிமையாண்மை + பரிப்புக்கள்) (07 புள்ளிகள்)

(b) 2025 ஏப்ரல் 30 இல் முடிவடைந்த மாதத்திற்கான இலாபத்தைக் **கணிக்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 03

(A) **செஹன்சா டிரேடர்ஸ்** என்ற தனியுடமை வியாபாரமானது அரிசியின் மொத்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. பின்வரும் தகவல்கள் 2025 ஏப்ரல் மாதத்திற்கான கடனடிப்படையிலான விற்பனையுடன் தொடர்புடையவை :

திகதி	விலைப் பட்டியல் எண்	வாடிக்கையாளர்	உருப்படிகள்	அளவு	அலகு விலை (ரூ.)	வியாபாரக் கழிவு
05-04-2025	S145	சமிது டிரேடர்ஸ்	கீரி சம்பா	200 kg	200	5%
10-04-2025	S146	ருசிறு டிரேடர்ஸ்	சீரகச் சம்பா	500 kg	250	10%
14-04-2025	S147	சமது டிரேடர்ஸ்	பாஸ்மதி	300 kg	500	-
20-04-2025	S148	சஜீதா டிரேடர்ஸ்	நாட்டரிசி	100 kg	180	5%

நீங்கள் செய்ய வேண்டியது :

2025 ஏப்ரல் மாதத்திற்கான **செஹன்சா டிரேடர்ஸின்** விற்பனை நாளேட்டை (விற்பனை நாட்குறிப்பேடு)த் **தயாரிக்க.** (05 புள்ளிகள்)

(B) 2025 மார்ச் 31 இலான **மனுக்க டிரேடர்ஸின்** வங்கிக் கூற்றின்படி வங்கி மீதியானது, 2025 மார்ச் 31 இலான சாதகமான (வரவு) காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) மீதியான ரூ. 200,000/- உடன் இணங்கவில்லை. கூற்றானது ரூ. 270,000/- என்ற ஒரு சாதகமான மீதியைக் காட்டியது.

பின்னர், வேறுபாட்டிற்கான பின்வரும் காரணங்கள் அடையாளங் காணப்பட்டன :

(1) **மனுக்க டிரேடர்ஸ்** ஆனது மாதாந்த கடன் தவணைப் பணம் ரூ. 50,000/- ஐச் செலுத்துவதற்கான நிலையியற் கட்டளை அறிவுறுத்தலை வழங்கியுள்ளது. எவ்வாறாயினும், இது காசேட்டில் விடுபட்டுள்ளது.

(2) வணிகத்தின் கடன்பட்டோர் ஒருவரால் நேரடி வைப்பாக ரூ. 65,000/- செலுத்தப்பட்டிருந்தது. இது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(3) 2025 மார்ச் 28 இல், வழங்குநரான **மினோலி (பிரை.)லிமிட்டெட்** இற்கு ரூ. 100,000/- காசோலை வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், இது 2025 ஏப்ரல் 02 இலேயே வங்கிக்குக் சமர்ப்பிக்கப் பட்டிருந்தது.

(4) 2025 மார்ச் 30 இல் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூ. 80,000/- பெறுமதியான ஒரு காசோலை 2025 மார்ச் மாத இறுதிக்குள் தேறியிருக்கவில்லை.

(5) வங்கிக் கட்டணங்கள் ரூ. 5,000/- ஆனது காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(6) வங்கியானது தவறுதலாக ரூ. 40,000/- ஐ **மனுக்க டிரேடர்ஸின்** நடைமுறைக் கணக்கிற்கு செலவுப் பதிவு செய்திருந்தது. இந்த வழு, கூற்றின் மீதியில் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

நீங்கள் செய்ய வேண்டியவை :

பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) (03 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இலான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 04

உதார பப்ளிகேசன்ஸ் ஆனது புத்தகங்கள் அச்சிடும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. பின்வரும் தகவல்கள் 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **உதார பப்ளிகேசன்ஸ்** இன் கணக்கேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

விபரம்	ரூ.
2024 ஏப்ரல் 01 இல் மூலப் பொருள் இருப்பு	500,000
ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட மூலப் பொருள்கள்	6,000,000
2024 ஏப்ரல் 01 இல் புத்துருவாகும் வேலைகள் (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது)	230,000
மூலப் பொருளின் உள்வந்த வண்டிக்கூலி	100,000
நேர் கூலிகள்	2,500,000
இயந்திரப் பராமரிப்பு	60,000
பாதுகாப்புக் கட்டணங்கள்	600,000
மின்சாரம்	900,000
வாடகை	1,000,000
இயந்திரம் (கிரயத்தில்)	2,000,000
மோட்டார் லொறி (கிரயத்தில்)	1,500,000

பின்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2025 மார்ச் 31 இல் இறுதி இருப்பு மீதிகள் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன :

விபரம்	ரூ.
மூலப் பொருள் இருப்பு (கிரயத்தில்)	300,000
புத்துருவாகும் வேலை (முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது)	430,000

(2) பின்வரும் செலவினங்கள் கீழ்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் :

செலவினங்கள்	தொழிற்சாலை	அலுவலகம்
பாதுகாப்புக் கட்டணங்கள்	70%	30%
மின்சாரம்	80%	20%
வாடகை	80%	20%

(3) பொறியும் இயந்திரமும் புத்தகங்களைச் அச்சிடப் பயன்படுத்தப்படும் அதே வேளை மோட்டார் லொறி, வாடிக்கையாளர்களுக்கு அச்சிடப்பட்ட புத்தகங்களை விநியோகிப்பதற்கு வணிகத்தால் பயன்படுத்தப்படுகிறது. வணிகத்தின் கொள்கையானது கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் பின்வருமாறு தேய்மானஞ் செய்வதாகும் :

இயந்திரம் : 20%

மோட்டார் லொறி : 25%

(4) இயந்திரப் பாதுகாவலர்களுக்கு புத்தகம் ஒன்றிற்கு ரூ. 50/- என்ற அடிப்படையில் உற்பத்தி ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. ஆண்டின் காலப்பகுதியில் 10,000 புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

(5) உற்பத்தி செய்யப்பட்ட உருப்படிகள் உற்பத்திக் கிரயத்தில் 20% இலாபம் வைத்து வியாபாரப் பிரிவுக்கு மாற்றப்படுகின்றன.

நீங்கள் செய்ய வேண்டியது :

2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **உதார பப்ளிகேசன்ஸ்** இன் உற்பத்திக் கிரயக் கூற்றை (உற்பத்திக் கணக்கை)த் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

வினா 05

கணக்குகள் நிறைவேற்றுநரால் தயாரிக்கப்பட்ட 2025 மார்ச் 31 இலான **தருண் டிரேடர்ஸ்** இன் பரீட்சை மீதி இணங்கவில்லை என்பதுடன் வித்தியாசம் ரூ. 170,000/- ஆனது தொங்கற் கணக்கிற்கு செலவுப் பதிவு செய்யப்பட்டது. தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியைப் பயன்படுத்தி, வரைவு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. வரைவு நிதிக் கூற்றுக்களின்படி, ஒரு நட்டம் ரூ. 450,000/- பதிவு செய்யப்பட்டது.

பின்னர், வித்தியாசத்திற்கான காரணங்களாக பின்வரும் வழுக்கள் அடையாளங் காணப்பட்டன :

(1) 2025 மார்ச் மாதத்திற்காகச் செலுத்த வேண்டிய சம்பளம் ரூ. 100,000/- ஆக இருந்தது. இது கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(2) பெற்ற வட்டி வருமானம் ரூ. 50,000/- ஆனது வட்டிச் செலவினமாகப் பதிவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், காசுப் பெறுவனவு காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(3) 2025 மார்ச் 31 இல் மேற்கொள்ளப்பட்ட மோட்டார் வாகனப் பழுதுபார்ப்புச் செலவினம் ரூ. 40,000/- ஆனது தவறுதலாக மோட்டார் வாகனக் கணக்கிற்கு மூலதனமாக்கப்பட்டது.

(4) காசு அடிப்படையில் செய்யப்பட்ட காகிதாதிச் செலவினங்கள் ரூ. 25,000/- ஆனது காகிதாதிக் கணக்கில் இரண்டு முறை பதிவு செய்யப்பட்டுள்ள அதே வேளை அது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(5) 2025 பெப்ரவரி மாதத்திற்காகச் செலுத்தப்பட்ட தொலைபேசிச் செலவினம் ரூ. 16,000/- ஆனது வாடகை செலவினக் கணக்கில் ரூ. 61,000/- ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதற்கான செலவுப் பதிவு சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நீங்கள் செய்ய வேண்டியவை:

பின்வருவனவற்றைத் **தயாரிக்குக**:

(a) மேற்படி வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகள். (05 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கு (02 புள்ளிகள்)

(c) திருத்தப்பட்ட இலாபத்தைக் காட்டும் ஒரு கூற்று. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி B முடிவு

ஒரு (01) கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி C

வினா 06

CodeLoom என்பது **ஹெனுகா** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுடைமை வியாபாரமாகும். 2025 மார்ச் 31 இலான **CodeLoom** இன் பரீட்சை மீதி கீழ்வருமாறு:

CodeLoom

2025 மார்ச் 31 இலான பரீட்சை மீதி *(ரூ.'000)*

விபரம்	வரவு	செலவு
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :		
காணியும் கட்டடமும் (காணிக் கிரயம் ரூ. 5 மில்லியன்)	11,000	
இயந்திரம்	9,000	
மோட்டார் வாகனங்கள்	5,000	
2024 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம்:		
கட்டடங்கள்		3,000
இயந்திரம்		4,500
மோட்டார் வாகனங்கள்		2,500
விற்பனைகள்		92,000
2024 ஏப்ரல் 01 இல் இருப்பு	8,500	
கொள்வனவுகள்	63,000	
வியாபார வருமதிகள்	7,700	
2024 ஏப்ரல் 01 இல் வியாபார வருமதிகள் சேதஇழப்பு ஏற்பாடு		300
வியாபார சென்மதிகள்		5,275
வங்கியில் உள்ள காசு	500	
கையில் உள்ள காசு	25	
வங்கிக் கடன்		8,000
சம்பளங்களும் கூலிகளும்	15,500	
காப்புறுதிச் செலவினங்கள்	600	
பாதுகாப்புக் கட்டணங்கள்	750	
செலுத்திய மின்சாரக் கட்டணப் பட்டியல்	3,100	
விற்பனைத் தரகு	400	
செலுத்திய அலுவலக வாடகை	3,500	
2024 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்கு		13,000
மொத்தம்	**128,575**	**128,575**

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) கிரயத்தில் மதிப்பிடப்பட்ட 2025 மார்ச் 31 இலான இறுதி இருப்பு ரூ. 9,700,000/-.

(2) மார்ச் மாதத்திற்கான மின்சாரக் கட்டணம் ரூ. 78,000/- ஆனது பதிவு செய்யப்படவில்லை. இது 2025 ஏப்ரல் 03 இல் செலுத்தப்பட்டது.

(3) 2025 சனவரி 01 இல், 12% வருடாந்த வட்டியில், வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக **மெட்ரோ வங்கி**யிடமிருந்து ஒரு வங்கிக் கடன் ரூ. 8,000,000/- பெற்றுக் கொள்ளப்பட்டது. கடனின் மூலதன மீள்-கொடுப்பனவுகளுக்காக வங்கி ஒரு (01) வருட சலுகைக் காலத்தை வழங்கியுள்ளது. ஆண்டிற்கான வட்டி கணக்கில் எடுக்கப்படவில்லை.

(4) வணிகத்தின் கொள்கையானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் பின்வருமாறு தேய்மானஞ் செய்வதாகும்.:

கட்டடங்கள்	ஆண்டிற்கு 10%
இயந்திரம்	ஆண்டிற்கு 20%
மோட்டார் வாகனங்கள்	ஆண்டிற்கு 25%

(5) வணிகமானது 2024 ஏப்ரல் 01 இல் ஒரு புதிய வாடகை உடன்படிக்கையைச் செய்து கொண்டது. புதிய வாடகை உடன்படிக்கையின்படி, வாடகை வைப்புத்தொகை ரூ. 500,000/- செலுத்தப்பட்டது. இது இரண்டு (02) வருட வாடகைக் காலத்தின் முடிவில் பெறத்தக்கதாகும். மாதாந்த வாடகை ரூ.300,000/- ஆகும். செலுத்திய வாடகை வைப்புத்தொகையும் ஆண்டிற்காகச் செலுத்திய வாடகையும் பரீட்சை மீதியில் உள்ள 'செலுத்திய அலுவலக வாடகை' இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

(6) **CodeLoom** ஆனது நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கடன்பட்டோர் மீதி ரூ. 200,000/- ஐ அறவிட முடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்யவும், 2025 மார்ச் 31 இலான எஞ்சிய வியாபார வருமதிகள் மீதியில் 10% வியாபார வருமதிகள் மீதான சேதஇழப்பு ஏற்பாட்டை (ஐயக் கடன் ஏற்பாடு)ச் செய்யவும் தீர்மானித்துள்ளது.

நீங்கள் செய்ய வேண்டியவை:

பின்வருவனவற்றைத் **தயாரிக்க**:

(a) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று. (11 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இல் நிதி நிலைக் கூற்று. (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி C முடிவு

செயல் வினைச் சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல்

மட்டம்	செயல் வினைச்சொல்	வரைவிலக்கணம்	மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள்
நினைவிற் கொள்ளல் உண்மைகள், பதங்கள், அடிப்படை எண்ணக்கருக்கள் , அல்லது பதில்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் தேவையின்றி அவற்றை நினைவிற் கொள்ளுதல்	அடையாளங் காண்க இனங்காண்க/ (Identify)	யாரையாவது அல்லது எதையாவது ஏற்பிசைவு செய்தல்	தலைப்பின் பிரதான பகுதிகளை கண்டுபிடித்து, பெயரிடுதல்
	வரையறுக்க (Define)	ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் கருத்து	ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் தெளிவான கருத்தை வழங்குதல்
	ஏற்பிசைவு செய்க (Recognize)	முன்பு பார்த்த ஒன்றைப் பற்றிய விழிப்புணர்வு	முந்தைய கற்றலில் இருந்து ஏதாவது ஒன்றைக் கண்டறிந்து ஏற்றுக் கொள்ளல்
	குறிப்பிடுக/ கூறுக (State)	தகவலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வெளிப்பாடு	பிரதான விடயங்கள் அல்லது எண்ணக்கருக்களை நேரடியான முறையில் வெளிப்படுத்தல்
	பட்டியலிடுக/ நிரற்படுத்துக. (List)	பெயர்கள், எண்கள், அல்லது உருப்படிகளின் தொடர்	பிரதான விடயங்களை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எழுதுதல்
	பதிவு செய்க (Record)	ஒரு முறைமையில் விவரங்களை உள்ளிடல் (கணக்கீடு அல்ல).	தொடர்புடைய விவரங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளிடுதல்
விளங்கிக் கொள்ளல் தகவல் சாதனங்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதலும் அதன் உட்பொருளை விளக்குவதற்கு அல்லது அதனை விபரிப்பதற்கு இயலுமாக இருத்தல்	கட்டியெழுப்புக (Construct)	கூறுகளை இணைப்பதன் மூலம் எதையாவது உருவாக்குதல்	வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு ஒரு முழுமையான கருத்துள்ளதாக ஆக்குதல்
	வேறுபடுத்துக (Differentiate)	இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையேயான வேறுபாடுகளை ஏற்பிசைவு செய்தல்	எண்ணக்கருக்கள் அல்லது உருப்படிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுதல்
	கலந்துரையாடுக / ஆராய்க (Discuss)	ஒரு தலைப்பைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கருதுதல்	பல்வேறு கண்ணோட்டங்களை ஆராய்ந்து நுண்ணறிவுகளை வழங்குதல்
	விபரிக்க (Explain)	எதையாவது பெரியளவில் விரிவாகத் தெளிவுபடுத்தல்	தர்க்கரீதியான மற்றும் விரிவான விளக்கங்களை வழங்குதல்
	எடுத்துக்காட்டுகளுடன் விபரிக்குக (Illustrate)	ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த உதாரணங்கள், விளக்கப்படங்கள், அல்லது காட்சிகளை பயன்படுத்தல்	பொருத்தமான உதாரணங்கள் அல்லது காட்சிகளுடன் விபரிப்புகளை ஆதரித்தல்
	உட்பொருளை விளக்குக (Interpret)	தகவல் அல்லது செயல்களின் அர்த்தத்தை விபரித்தல்	உங்கள் சொந்த மொழிநடையில் ஏதாவதொன்றின் பொருளை விபரித்தல்
	விளக்குக (Describe)	ஏதாவதொன்றின் விரிவான விளக்கம்	கட்டமைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய விவரங்களை வழங்குதல்
	பொழிப்பாக்குக (Summarise)	பிரதான விடயங்களின் சுருக்கமான கூற்று	பிரதான தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல்
பிரயோகித்தல் கற்றுக்கொண்ட விடயத்தை புதிய மற்றும் உறுதியான சூழ்நிலைகளில் பயன்படுத்துதல். இதற்கு அறிவு மற்றும் திறன்களின் நடைமுறைப் பிரயோகம் தேவைப்படுகிறது..	பிரயோகிக்க (Apply)	ஒரு சூழ்நிலையில் அறிவு, திறன்கள், அல்லது விதிகளைப் பயன்படுத்தல்	ஒரு முடிவை அடைய தொடர்புடைய அறிவு, அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தல்
	கணிக்குக / கணிப்பீடு செய்க (calculate)	கணித அல்லது தர்க்க முறைகள் ஊடாக பெறுமதியை தீர்மானித்தல்	ஒரு தீர்வை அடைய எண் அல்லது தர்க்கரீதியான செயன்முறைகளைப் பயன்படுத்தல்
	தீர்மானிக்க (Determine)	ஆய்வு அல்லது கணக்கீடு மூலம் ஏதாவதொன்றை நிறுவுதல்	கணக்கீடு அல்லது ஆய்வுக்காக ஏதாவதொன்றை கண்டுபிடித்தல் அல்லது முடிபு செய்தல்
	செயல் விளக்கமளிக்குக (Demonstrate)	ஒரு செயன்முறை அல்லது முறையைக் காண்பித்தல்	கட்டமைக்கப்பட்ட படிமுறைகள் ஊடாக தெளிவான உதாரணத்தைக் காட்டுதல்
	தயாரிக்க (Prepare)	பயன்பாட்டிற்கான பொருள்கள் அல்லது தகவல்களை ஒழுங்கமைத்தல்	ஒரு பணியில் ஈடுபடுவதற்கு முன் தேவையான விவரங்களை வரிசைப்படுத்தல்
	பயன்படுத்துக (Use)	ஒரு நோக்கத்திற்காக எண்ணக்கரு, கருவி, அல்லது முறையைப் பிரயோகித்தல்	தொடர்புடைய அறிவு அல்லது வளங்களைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல்
	முன்வைக்குக (Present)	தகவல்களை பயனுறுதிமிக்க வகையில் பகிர்தல்	பிரதான நுண்ணறிவுகளை தெளிவாகவும் தொழில்முறை ரீதியாகவும் வழங்குதல்

மட்டம்	செயல் வினைச்சொல்	வரைவிலக்கணம்	மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள்
பகுப்பாய்வு தகவல்களின் கட்டமைப்பு மற்றும் தொடர்பை புரிந்து கொள்வதற்கு தகவல்களை கூறுகளாகப் பிரித்தல்	பகுப்பாய்வு செய்க (Analyse)	ஒரு பொருளை அதன் பாகங்களைப் புரிந்துகொள்ள விரிவாக ஆராய்தல்	சிறந்த புரிதலுக்காக தகவலை பிரதான பகுதிகளாகப் பிரித்தல்
	ஒப்பிடுக (Compare)	ஒற்றுமைகள் மற்றும் / அல்லது வேறுபாடுகளை ஆராய்தல்	பிரதான பொதுவான தன்மைகள் மற்றும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுதல்
	பிரித்தறிக (Distinguish)	தனித்துவமான பண்புகளை ஏற்பிசைவு செய்தல்	பொருள்களை ஒன்றிலிருந்தொன்று எது வேறுபடுத்துகிறது என்பதை அடையாளங் காணல்
	பரீட்சிக்க / சோதிக்க (Examine)	ஏதாவது ஒன்றின் தன்மையைத் தீர்மானிக்க அதனைப் பரிசோதித்தல்	ஏதாவது ஒன்றைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைக் கூர்ந்து பார்த்தல்
	கோடிட்டுக் காட்டுக (Outline)	பிரதான விடயங்களின் பொழிப்பு	பிரதான அம்சங்களின் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கண்ணோட்டத்தை வழங்குதல்
	நடத்துக (Conduct)	ஒரு பரிசோதனை, கணக்கெடுப்பு, அல்லது ஆய்வுக்கான கூறுகளை ஒழுங்கமைத்தல்	ஒரு பணியை முறையாக முன்னெடுக்க கட்டமைக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றுதல்
	அறிக்கையிடுக (Report)	கண்டறிதல்களின் கட்டமைக்கப்பட்ட முன்வைப்பு	பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை ஒரு தெளிவான மற்றும் தர்க்கரீதியான வடிவத்தில் முன்வைத்தல்
மதிப்பீடு தேர்வு நிபந்தனை அல்லது நியமங்களின் அடிப்படையில் யோசனைகள் அல்லது பொருள்களின் பெறுமதி அல்லது தரம் குறித்து தீர்ப்புகளை வழங்குதல்	ஆலோசனை வழங்குக (Advise)	யோசனைகள் அல்லது பரிந்துரைகளை வழங்குதல்	பகுப்பாய்வின் அடிப்படையில் தகவலறிந்த வழிகாட்டலை வழங்குதல்
	மதிப்பீடு செய்க (Evaluate)	பெறுமதி, பயனுறுதித்தன்மை, அல்லது தாக்கத்தின் விமர்சன ரீதியான மதிப்பீடு	தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் ஏதாவது ஒன்றின் தரம் அல்லது தொடர்புடைமையை மதிப்பிடுதல்
	அமைக்குக (Formulate)	ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை அல்லது திட்டத்தின் அபிவிருத்தி	நன்கு வரையறுக்கப்பட்ட முறை அல்லது உபாயத்தை உருவாக்குதல்
	பரிந்துரை செய்க (Recommend)	பொருத்தமான செயல் திட்டம் பற்றி யோசனை முன்வைத்தல்	தர்க்கரீதியான பகுத்தறிவால் ஆதரிக்கப்படும் ஒரு அணுகுமுறையை முன்மொழிதல்
உருவாக்குதல் ஒரு ஒத்திசைவான அல்லது செயற்பாட்டு முழுமையை உருவாக்க, புதுமையான வழிகளில் கூறுகளை இணைத்தல்; புதிய யோசனைகள், உற்பத்திகள், அல்லது புரிதல் வழிகளை உருவாக்கும் ஆற்றல்	உருவாக்குக (Create)	புதிதாக ஏதாவதொன்றை உருவாக்குதல்	அசலான மற்றும் நோக்கமுள்ள ஏதாவதொன்றை விருத்தி செய்தல்
	மதிப்பிடுக (Assess)	தரம், ஆற்றல், அல்லது தன்மை பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது மதிப்பிடுதல்	கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பை வழங்குதல்
	விருத்தி செய்க (Develop)	ஒரு யோசனை, பொருள், அல்லது எண்ணக்கருவின் விரிவாக்கம் அல்லது செம்மையாக்கம்	காலப்போக்கில் ஒரு யோசனையை வலுப்படுத்தி, மேம்படுத்துதல்
	முன்மொழிக (Propose)	கருத்திற் கொள்வதற்காக ஒரு திட்டத்தை அல்லது எண்ணக் கருவைப் பரிந்துரைத்தல்	ஒரு யோசனை அல்லது கட்டமைக்கப்பட்ட பரிந்துரையை முன்வைத்தல்
	இணைப்பாக்கம் செய்க (Synthesis)	ஒரு ஒத்திசைவான முழுமையை உருவாக்க பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்தல்	பல யோசனைகள் அல்லது நுண்ணறிவுகளை ஒரு அர்த்தமுள்ள முடிவில் ஒருங்கிணைத்தல்
	வடிவமைக்குக (Design)	ஏதாவது ஒன்றிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குதல்	ஒரு பொருள் அல்லது செயன்முறைக்கு ஒரு விரிவான கட்டமைப்பை அமைத்தல்
	தொகுக்குக (Compile)	பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களை ஒன்றுசேர்த்தல்	சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு விரிவான வடிவத்தில் ஒழுங்கமைத்தல்

இலங்கை

கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

பாடத்திட்டம் 2025

பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

மட்டம் 01

1901 – நிதிக் கணக்கீடு [FAC]

கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவின் வெளியீடு

பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

வினா 01

1.1 (3)

1.2 (4)

1.3 (3)

1.4 (1)

1.5 (3)

1.6 (1)

1.7 (2)

1.8 (2)

1.9 (4)

1.10 (3)

1.11 சரியானது

1.12 சரியானது

1.13 தவறானது

1.14 சரியானது

1.15 தவறானது

1.16 (a) நாட்குறிப்பேட்டு உறுதிச்சீட்டு

(b) கொள்வனவு விலைப்பட்டியல்

1.17 கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டின் பிரதிகூலங்கள்:

- உயர்வான முதலீட்டுக் கிரயம்.
- தொழினுட்ப அறிவின் தேவை.
- தொழினுட்ப அலுவலர்களைத் தக்கவைத்தல்.
- மனித வழுக்கள் காரணமான தோல்விகள்.
- தொழிற் சந்தைத் தாக்கங்கள்.
- சிக்கலான தன்மை. *(ஏதாவது இரண்டு பிரதிகூலங்கள் எதிர்பார்க்கப்படுகிறது)*

1.18 **வியாபார வருமதிகளின் கட்டுப்பாட்டுக் கணக்கு**

	ரூ.		ரூ.
B/B/F	100,000	விடுபட்ட மீதி	8,000
		மிகையாகக் குறிப்பிடப்பட்ட மீதி	5,000
		B/C/F	**87,000**
	100,000		**100,000**

1.19 வியாபார சென்மதிகள்
வங்கி மேலதிகப்பற்று
அட்டுறுவான கட்டணங்கள்
செலுத்த வேண்டிய வருமான வரி *(ஏதாவது இரண்டு உதாரணங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன)*

1.20 பேரேட்டு மீதிகளில் உள்ள துல்லியத்தைச் சோதிப்பதற்கு.
பரீட்சை மீதியிலிருந்து கண்டறியத்தக்க ஏதாவது வழுக்களை அடையாளங் காண்பதற்கு
நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இலகுவானது.
கணக்கீட்டுக்குப் பின்னரான சீராக்கங்களுக்கு இலகுவானது.
கணக்காய்வுச் செயன்முறையில் கணக்காய்வாளர்களுக்கு உதவுதல்

(ஏதாவது இரண்டு நன்மைகள் எதிர்பார்க்கப்படுகின்றன)

(மொத்தம் 40 புள்ளிகள்)

பகுதி B

நான்கு (04) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 40 புள்ளிகள்)

விடை 02

அலகு 2	-	**கணக்கீட்டுச் சமன்பாடு, இரட்டைப் பதிவு முறைமை, கணக்கீட்டு எண்ணக்கருக்கள்.**
கற்றற் பேறுகள்	-	கணக்கீட்டுச் சமன்பாடு மீதான வணிகப் பரிவர்த்தனைகளின் தாக்கங்களைப் பிரயோகித்தல்.

(a)

ரூ.'000

சுட்டெண்	சொத்துக்கள்				உரிமையாண்மை	+ பரிப்புக்கள்
	இயந்திரம்	+ இருப்பு	+ வியாபார வருமதிகள்	+ காசு		
(1)	+ 1,500			+ 500	+ 2,000	
(2)		+ 800				+ 800
(3)		- 300	+ 500		+ 200	
(4)					- 20 + 20	
(5)			- 400	+ 360	- 40	
(6)		- 50			- 50	
(7)	- 10				- 10	
மொத்தம்	**1,490**	**450**	**100**	**860**	**2,100**	**800**

(07 புள்ளிகள்)

(b)

இலாபம்= இறுதி நிகரச் சொத்துக்கள் – ஆரம்ப நிகரச் சொத்துக்கள் + எடுப்பனவுகள் – மேலதிக மூலதனம்

= 2,100,000 – 2,000,000 + 50,000 – 20,000

= 130,000 **(03 புள்ளிகள்)**

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 03

அலகு 3	**-**	**முதன்மைப் பதிவேடுகள், கட்டுப்பாட்டுக் கணக்குகள், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகள், பரீட்சை மீதி**
கற்றற் பேறுகள்	-	முதன்மைப் பதிவேடுகளைத் தயாரித்தல், பரிவர்த்தனைகளை பேரேட்டுக் கணக்குகளில் பதிவு செய்தல். (காசுப் பெறுவனவுகள் நாட்குறிப்பேடு, காசுக் கொடுப்பனவுகள் நாட்குறிப்பேடு. சில்லறைக் காசேடு, கொள்வனவு நாளேடு, வெளித் திரும்பல் நாளேடு, விற்பனை நாளேடு, உட்திரும்பல் நாளேடு, பொது நாட்குறிப்பேடு)
	-	சீராக்கப்பட்ட காசேட்டுடனும் சீராக்கப்பட்ட காசேடு இல்லாமலும் **வங்கிக் கணக்கிணக்கத்தைத் தயாரித்தல்.**

(A)

விற்பனை நாட்குறிப்பேடு

திகதி	விலைப்பட்டியல் எண்	விபரம்	மொத்தத் தொகை	கழிவு	நிகரத் தொகை
05-04-2025	S145	சமிந்து டிரேடர்ஸ்	40,000	2,000	38,000
10-04-2025	S146	ருசிறு டிரேடர்ஸ்	125,000	12,500	112,500
14-04-2025	S147	சமத் டிரேடர்ஸ்	150,000	-	150,000
20-04-2025	S148	சஜீதா டிரேடர்ஸ்	18,000	900	17,100
பொதுப் பேரேட்டிற்கு மாற்றப்பட்டவை					**317,600**

(05 புள்ளிகள்)

(B)

(a)

சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு

மீதி B/F	200,000	கடன்	50,000
வியாபார வருமதிகள்	65,000	வங்கிக் கட்டணங்கள்	5,000
		மீதி C/D	210,000
	265,000		265,000

(03 புள்ளிகள்)

(b)

வங்கிக் கணக்கிணக்கம்

சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கின்படி மீதி		210,000
(+)		
சமர்ப்பிக்கப்படாத கொடுப்பனவு	100,000	
வங்கியால் தவறுதலாக செலவு வைக்கப்பட்டது	40,000	140,000
(-)		
தேறாத வைப்பு	80,000	(80,000)
வங்கிக் கூற்றின்படி மீதி		270,000

(02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 04

அலகு 4	-	**தனியுடமை வியாபாரத்திற்கான நிதிக் கூற்றுகளின் தயாரிப்பு.**
கற்றற் பேறுகள்	-	உற்பத்திக் கணக்கைத் (உற்பத்திக் கிரயக் கூற்று) தயாரித்தல்.

உதார பப்ளிகேசன்ஸ்

உற்பத்திக் கணக்கு

2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது *ரூ. '000*

மூலப் பொருள்கள்		
ஆரம்ப மூலப்பொருள் இருப்பு	500	
கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருள்கள்	6,000	
உள்வந்த வண்டிக்கூலி	100	
(-) இறுதி மூலப்பொருள் இருப்பு	(300)	
மூலப்பொருள் நுகர்வு		6,300
நேர் கூலி		
நேர் கூலிகள்	2,500	
உற்பத்தி ஊக்கத்தொகைகள் (50 X 10)	500	3,000
முதன்மைக் கிரயம்		9,300
+ ஆரம்ப புத்துருவாகும் வேலை இருப்பு	230	
(-) இறுதிப் புத்துருவாகும் வேலை இருப்பு	(430)	(200)
பூர்த்தியடைந்த உருப்படிகளின் முதன்மைக் கிரயம்		9,100
உற்பத்தி மேந்தலைகள்		
இயந்திரப் பராமரிப்பு	60	
பாதுகாப்புக் கட்டணங்கள் (70% X 600)	420	
மின்சாரக் கட்டணங்கள் (80% X 900)	720	
வாடகை (80% X 1,000)	800	
இயந்திரத் தேய்மானம் (2,000 X 20%)	400	2,400
உற்பத்திக் கிரயம்		11,500
+ தொழிற்சாலை இலாபம் (11,500 X 20%)		2,300
வியாபாரப் பிரிவுக்கு மாற்றப்பட்டவை		13,800

(10 புள்ளிகள்)

வினா 05

அலகு 3	**- முதன்மைப் பதிவேடுகள், கட்டுப்பாட்டுக் கணக்குகள், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகள், பரீட்சை மீதி**
கற்றற் பேறுகள் -	கணக்கீட்டு வழுக்களின் பல்வேறு வகைகளை இனங்காண்பர், வழுக்களைத் திருத்துவதற்கான பதிவுகளைத் தயாரித்தல் (விடுபாட்டு வழுக்கள், இழைக்கப்பட்ட வழுக்கள், கோட்பாட்டு வழுக்கள், இழப்பீட்டு வழுக்கள், மூலப் பதிவு வழுக்கள், இரட்டித்தல் வழுக்கள், முழுமையான தலைகீழ் வழுக்கள்).
	- தொங்கற் கணக்கின் நோக்கத்தை விபரிப்பதுடன், தொங்கற் கணக்கைத் தயாரித்தல்.
	- வணிகத்தின் நிதிக் கூற்றுகள் மீதான வழுக்களின் தாக்கத்தைக் கணிப்பிடுதல்.

(a) பொது நாட்குறிப்பேடு

சுட்டெண்	**விபரம்**	**வரவு (ரூ.)**	**செலவு (ரூ.)**
01	சம்பளச் செலவு - வரவு	100,000	
	செலுத்த வேண்டிய சம்பளக் கணக்கு - செலவு		100,000
	(செலுத்த வேண்டிய சம்பளம் மீதான விடுபாட்டு வழுவைத் திருத்துதல்)		
02	தொங்கற் கணக்கு - வரவு	100,000	
	வட்டிச் செலவினக் கணக்கு - செலவு		50,000
	வட்டி வருமானக் கணக்கு - செலவு		50,000
	(வட்டி வருமானம் மீதான எழுதுநர் வழுவைத் திருத்துதல்)		
03	மோட்டார் வாகனப் பழுதுபார்ப்புச் செலவினக் கணக்கு - வரவு	40,000	
	மோட்டார் வாகனக் கணக்கு - செலவு		40,000
	(வாகனப் பழுதுபார்ப்பு மீதான கோட்பாட்டு வழுவைத் திருத்துதல்)		
04	தொங்கற் கணக்கு - வரவு	25,000	
	காகிதாதிச் செலவினம் - செலவு		25,000
	(காகிதாதிகள் மீதான இரட்டித்தல் வழுவைத் திருத்துதல்)		
05	தொலைபேசிச் செலவினம் - வரவு	16,000	
	தொங்கற் கணக்கு - வரவு	45,000	
	வாடகைச் செலவினம் - செலவு		61,000
	(தொலைபேசிச் செலவினம் மீதான எழுதுநர் வழு மற்றும் இழைக்கப்பட்ட வழுவைத் திருத்துதல்)		

(05 புள்ளிகள்)

(b) **தொங்கற் கணக்கு**

வட்டிச் செலவினம்	50,000	மீதி B/F	170,000
வட்டி வருமானம்	50,000		
வாடகைச் செலவினம்	45,000		
காகிதாதி	25,000		
	170,000		170,000

(02 புள்ளிகள்)

(c) **வரைவு இலாபத்தைத் திருத்துவதற்கான கூற்று**

வரைவு செய்யப்பட்ட இலாபம்/(நட்டம்)		(450,000)
(+)		
வட்டிச் செலவினம்	50,000	
வட்டி வருமானம்	50,000	
காகிதாதிச் செலவினம்	25,000	
வாடகைச் செலவினம்	61,000	186,000
(-)		
சம்பளச் செலவினம்	100,000	
மோட்டார் வாகனப் பழுதுபார்ப்பு	40,000	
தொலைபேசிச் செலவினம்	16,000	(156,000)
திருத்தப்பட்ட இலாபம்/(நட்டம்)		(420,000)

(03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி C

ஒரு (01) கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

வினா 06

அலகு 4	-	தனியுடமை வியாபாரத்திற்கான நிதிக் கூற்றுகளின் தயாரிப்பு
கற்றற் பேறுகள்	-	தனியுடமை வியாபாரம் ஒன்றிற்கான வருமானக் கூற்றைத் (இலாபம் அல்லது நட்டம் மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று) தயாரித்தல்.
	-	தனியுடமை வியாபாரம் ஒன்றிற்கான நிதி நிலைக் கூற்றைத் (ஐந்தொகை) தயாரித்தல்.

(a) **CodeLoom**

2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

இலாப அல்லது நட்டக் கூற்று *ரூ. '000*

விற்பனைகள்		92,000
(-) விற்பனைக் கிரயம்		
ஆரம்ப இருப்பு	8,500	
கொள்வனவுகள்	63,000	
(-) இறுதி இருப்பு	(9,700)	(61,800)
மொத்த இலாபம்		30,200
ஏனைய வருமானம்		
விநியோகச் செலவினங்கள்		
மோட்டார் வாகனத் தேய்மானம்	1,250	
அறவிடமுடியாக் கடன் பதிவழிப்பு	200	
கடன்பட்டோர் சேதஇழப்பின் குறை ஏற்பாடு **(W-5)**	450	
விற்பனைத் தரகு	400	(2,300)
நிருவாகச் செலவினங்கள்		
மின்சாரம் (78 + 3,100)	3,178	
கட்டடத் தேய்மானம்	600	
இயந்திரத் தேய்மானம்	1,800	
வாடகை (3,500 – 500 + 600)	3,600	
சம்பளங்கள்	15,500	
காப்புறுதி	600	
பாதுகாப்பு	750	(26,028)
நிதிச் செலவினங்கள்		
வட்டிச் செலவினம்	240	(240)
ஆண்டிற்கான இலாபம்		**1,632**

(11 புள்ளிகள்)

(b)

CodeLoom

2025 மார்ச் 31 இலான

நிதி நிலைக் கூற்று *ரூ.'000*

நடைமுறையல்லாச் சொத்துக்கள்	**கிரயம்**	**திரண்ட தேய்மானம்**	**கொண்டு செல்லல் பெறுமதி**
காணி	5,000	-	5,000
கட்டடம்	6,000	3,600	2,400
இயந்திரம்	9,000	6,300	2,700
மோட்டார் வாகனங்கள்	5,000	3,750	1,250
	25,000	13,650	11,350
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்பு		9,700	
வியாபார வருமதிகள் (7,700 - 200)	7,500		
(-) சேதஇழப்பு ஏற்பாடு (7,500 x 10%)	(750)	6,750	
வாடகை வைப்பு **(W-3)**		500	
வங்கியில் உள்ள காசு		500	
கையில் உள்ள காசு		25	17,475
மொத்தச் சொத்துக்கள்			28,825
உரிமையாண்மை			
மூலதனம்		13,000	
ஆண்டிற்கான இலாபம்		1,632	14,632
நடைமுறையல்லாப் பரிப்புக்கள்			
வங்கிக் கடன்		8,000	8,000
நடைமுறைப் பரிப்புக்கள்			
வியாபார சென்மதிகள்		5,275	
அட்டுறு செலவினங்கள் **(W-2)**		678	
செலுத்த வேண்டிய கடன் வட்டி **(W-1)**		240	6,193
மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்			**28,825**

(09 புள்ளிகள்)

செய்முறைகள்:

W1 – கடன் வட்டி

கடன் 8,000

வட்டி வீதம் 12%

மாதங்கள் 3/12

வட்டி 240 (8,000 X 12% x 3/12)

W2 – அட்டுறு செலவினங்கள்

மின்சாரக் கட்டணம் 78,000

வாடகை <u>600,000</u>

678,000

W2 – தேய்மானம்

ரூ. '000

	கட்டடங்கள்	இயந்திரங்கள்	மோட்டார் வாகனங்கள்
கிரயம்	6,000	9,000	5,000
தேய்மான %	10%	20%	25%
தேய்மானம்	600	1,800	1,250

W3 – வாடகை வைப்பு

வாடகை வைப்பு 500 (செலுத்திய வாடகையில் உள்ளடக்கப்பட்டுள்ளது)

இரட்டைப் பதிவு

வாடகை வைப்பு – வரவு 500

செலுத்திய வாடகை – செலவு 500

W4 – செலுத்த வேண்டிய வாடகை

மாதாந்த வாடகை	300
மாதங்கள்	12
மொத்த வாடகை	3,600
செலுத்திய வாடகை	3,000 (3,500-500)
அட்டுறு வாடகை	600 (3,600 – 3,000)

W5 – கடன்பட்டோரின் சேதஇழப்பு

வியாபார வருமதிகள்	7,500 (7,700 – 200)
சேதஇழப்பு %	10%
இறுதிக் கடன்பட்டோர் சேதஇழப்பு ஏற்பாடு	750 (7,500 X 10%)
ஆரம்பக் கடன்பட்டோர் சேதஇழப்பு ஏற்பாடு	300
குறை ஏற்பாடு	450 (750 – 300)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி C முடிவு